TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 -OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க் கிழமை, 1970 செப்டம்பர் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

சிறந்த தமிழ் எழுத்தாளர்.

* 160 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ல் சாஹித்ய அகடமியால் சிறந்த தமிழ் எழுத்தாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

(இ) அவர் இயற்றிய நூல் யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) காலஞ் சென்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

(இ) பிசிராந்தையார்.

பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையம்.

* 161 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டம், திருப்பூவனம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது உள்ள டாக்டர் குடும்பக்கட்டுப்பாடுக்கு செலவழிக்க இருந்த பணத்தை கையாடல் செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் என்றால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Stray Dogs at Manali.

Q. No. 162.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be please to state whether the Government have received any complaints about the killing of Stray Dogs at Manali by the authorities of the Madras Oil Refineries?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.